ASSOCIATION OF ACCOUNTING TECHNICIANS OF SRI LANKA

# பரீட்சகர் அறிக்கை

## ஆரம்பப் பரீட்சை – ஜனவரி 2014

## (50) அடிப்படைக் கணக்கியல்

---

## பகுதி -A

**வினா இல. 01** – 30 புள்ளிகள்
**(கட்டாயமாக விடையளிக்கவேண்டிய வினா)**

இந்த வினாவுக்கான அறிவுறுத்தல் வினாத்தாளில் தெளிவாக தரப்பட்டிருந்தும், சில பரீட்சார்த்திகள் அதனை கவனிக்காது வினாத்தாளிலேயே விடையை எழுதி விடைப்புத்தகத்துடன் அவற்றை இணைத்திருந்தனர். சிலர் ஆங்கில எழுத்திற்குப் பதிலாக இலக்கங்களை எழுதியிருந்தனர். அவதானிக்கப்பட்ட சில பொதுவான குறைபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன:

**(A)** நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் பிரதான நோக்கம் பலருக்கு தெரிந்திருக்கவில்லை. அனேகர் மோசடி மற்றும் வழுக்களை தடுப்பதற்காக என்ற தவறான விடை (2) இனை தேர்வு செய்திருந்தனர்.

**(E)** பல பரீட்சார்த்திகளுக்கு எந்திரக் கொள்வனவு, தேய்மானம் மற்றும் விற்பனை மீதான இலாபத்தை கணித்தல் பற்றிய போதிய அறிவு இருக்கவில்லை. பலர் விடைகள் (2) அல்லது (3) இனை தெரிவு செய்திருந்தனர்.

**(F)** ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரம் தொங்கற் கணக்கிலுள்ள ரூபா 10,000 வரவு மீதியை ஏற்படுத்திய வழுவை சரியாக அடையாளங் கண்டனர்.

**(H)** 50% க்கும் குறைவான பரீட்சார்த்திகள் ஆரம்பத் தொக்கினை சரியாக கணித்திருந்தனர்.

**(K)** மேந்தலை பற்றிய அறிவு போதுமானதல்ல. விடை இல (3) – அலுவலக வாடகை மற்றும் காப்புறுதி சரியான விடையாக இருந்தபோதிலும் சிலர் விடை இல (4) – தொழிற்சாலை மேற்பார்வையாளர் மற்றும் முகாரிக்கு செலுத்திய சம்பளம் எனும் தவறான விடையை தேர்வு செய்திருந்தனர்.

**(L)** அனேக பரீட்சார்த்திகள் கிரயங்கள் பற்றிய முறையான அறிவை கொண்டிராது, தவறான விடைகளான (3) அல்லது (4) இனை தேர்வு செய்திருந்தனர்.

**(O)** முதன்மைக் கிரயத்தை கணிப்பதற்கு சகல நேர் கிரயங்களையும் கூட்ட வரும் பெறுமதியாக இருந்த போதிலும் பலர் தவறான விடைகளான (2) அல்லது (3) இனை தேர்வு செய்திருந்தனர்.

# பகுதி B

**வினா இல. 02** – 25 புள்ளிகள்
**(கட்டாயமாக விடையளிக்கவேண்டிய வினா)**

வருமானக் கூற்று மற்றும் நிதிநிலைக் கூற்று ஆகியவற்றை தயாரிப்பதில் காணப்பட்ட பொதுவான தவறுகள் கீழே தரப்பட்டுள்ளன.

**(a) வருமானக் கூற்று ( வியாபார, இலாப நட்டக் கணக்கு)**

(1) பல பரீட்சார்த்திகள் வியாபாரக் கணக்கில் இறுதித் தொக்கினை தவறாகக் கணித்திருந்தனர். தொக்கு மதிப்பீடானது கிரயம் அல்லது நிகர தேறுகைப் பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதியில் அளவிடவேண்டிய போதிலும், பலர் கூடிய பெறுமதியில் அளவிட்டிருந்தனர்.

(2) அட்டுறு செலவின்கீழ் செலுத்தப்பட வேண்டிய மின்கட்டணம் மற்றும் சம்பளத்தை கணக்கிற் கொண்டிருக்கவில்லை.

(3) உரிமையாளரின் தனிப்பட்ட ஆயுட் காப்புறுதிக் கட்டணம் எடுப்பனவாக கொள்ளப்படாது வருமான கணக்கில் செலவாக காட்டப்பட்டிருந்தது.

(4) சிலர் தேய்மானத்தை தவறாகக் கணித்திருந்தனர்.

**(b) நிதிநிலைக்கூற்று (ஐந்தொகை)**

(1) பலர் தவறான தேய்மானக் கணிப்பின் காரணமாக தவறான திரள் தேய்மானத் தொகைகளை நிதிநிலைக் கூற்றில் காட்டியிருந்தனர்.

(2) காணியின் பெறுமதி தெளிவாகக் காட்டப்பட்டிருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் காணி மற்றும் கட்டட பெறுமதி முழுவதற்கும் தேய்மான ஏற்பாடு செய்திருந்தனர்.

(3) இறுதித் தொக்கிற்கு கிரயம் மற்றும் நிகர தேறுகைப்பெறுமதி இரண்டிலும் குறைந்த தொகையான ரூபா 800,000/- இனை கணக்கிற் கொள்வதற்குப் பதிலாக சிலர் கூடிய தொகையான ரூபா 830,000/- இனை கணக்கிற் கொண்டிருந்தனர்.

(4) காசுக் கையிருப்பினை ஒரு சிலரே சரியாகக் கணித்திருந்தனர். சரியான காசு எடுப்பனவை கணிக்க முடியாத காரணத்தினால் பலர் தவறான மீதியை காட்டியிருந்தனர்.

**பொதுவான தவறுகள்:**

(1) பரீட்சை மீதியிலுள்ள தொகைகள் கிட்டிய ஆயிரங்களில் ('000) என தெளிவாகக் கூறியிருந்தபோதிலும் சிலர் அதனை சரியாயகக் கவனத்திற் கொள்ளாது தவறான பெறுமதிகளை காட்டியிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் வருமானக்கூற்று மற்றும் நிதிநிலைக்கூற்றை உரிய முறையில் காட்டப்படவில்லை.

**வினா இல. 03** – 25 புள்ளிகள்
**(கட்டாயமாக விடையளிக்கவேண்டிய வினா)**

இந்த வினாவின் பகுதி A யில் உற்பத்திக் கணக்கு தயாரித்தல் பற்றிய அறிவும் பகுதி B யில் தொங்கற் கணக்கிற்கு சரியான நாட்பதிவுக் குறிப்புகளை எழுதுதல் தொடர்பான அறிவும் பரீட்சிக்கப்பட்டது.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் வருமாறு:

**பகுதி (A)** – உற்பத்திக் கணக்கை தயாரித்தல்.

(1) சில பரீட்சார்த்திகள் உற்பத்திக் கணக்கின் வடிவமைப்பை தெரிந்திருக்கவில்லை. சிலர் பரீட்சை மீதி வடிவிலும் வேறுசிலர் இலாப, நட்டக் கணக்கு வடிவிலும் தயாரித்திருந்தனர்.

(2) அனேகமானோர் மின்சுற்றுக்களை உற்பத்தி செய்வதற்கு செலுத்தவேண்டிய அனுமதிக் கட்டணத்தை (royalty) சரியாகக் கணித்திருக்கவில்லை. மேலும், நேர்க் கிரயமாக காட்டப்படவேண்டிய இதனை சிலர் உற்பத்தி மேந்தலையாக காட்டியிருந்தனர்.

(3) பலர், மின் கட்டணம் மற்றும் தொலைபேசி செலவுகளை உரிய சதவீதங்களை பிரயோகித்து தொழிற்சாலை மற்றும் அலுவலகத்திற்கு இடையிலும், ஊழியக் கிரயத்தினை உற்பத்தி மற்றும் தொழிற்சாலைக்கு இடையிலும் சரியாக ஒதுக்கியிருக்கவில்லை.

(4) புத்துருவாகும் வேலை முதன்மைக் கிரயத்தில் செம்மையாக்கம் செய்யப்பட வேண்டுமென வினாவில் தெளிவாக தெரிவித்திருந்த போதிலும், சிலர் உற்பத்திக் கணக்கு முடிவில் காட்டியிருந்தனர்.

**பகுதி (B) –** திருத்தத்திற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

(1) பலர் குறிப்பு 3 க்கான (அலுவலக பராமரிப்பு மற்றும் அலுவலக உபகரணம் தொடர்புபட்ட) நாட்குறிப்பு பதிவினை சரியாக எழுதியிருக்கவில்லை.

(2) குறிப்பு 4 இல், காசு ஊடுசெயல்கள் உள்ளடங்கலாக நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுமாறு கேட்டிருந்தும் சிலர் தொங்கற் கணக்கை உபயோகித்தே பதிவுகளை எழுதியிருந்தனர்.

(3) Most of them have prepared the suspense account correctly. But some have scored low marks due to incorrect opening balance arising through incorrect journal entry for Number (3).

## <u>பகுதி C</u>

**வினா இல. 04** – 10 புள்ளிகள்
**(விருப்பத் தேர்வு வினா)**

பகுதி A யில் காசேட்டுச் செம்மையாக்கமும், பகுதி B யில் பொறுட் பெறுகைக் குறிப்பும் பரீட்சிக்கப்பட்டது. அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு:

**பகுதி (A)**

(1) பலர் செம்மையாக்கிய காசேட்டு மீதியை தவறாகக் கணித்திருந்தனர்.

(2) செம்மையாக்க காசேடு பற்றி போதிய அறிவை கொண்டிராத சிலர் வினாவில் தரப்பட்ட தரவுகள் எல்லாவற்றையும் காசேட்டில் காட்டியிருந்தனர்.

(3) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றை தயாரித்தலில் சிலர் கூட்டவேண்டியவற்றை கழித்தும் கழிக்க வேண்டியவற்றை கூட்டியும் இருந்தனர்.

**பகுதி (B)**

(1) அனேகமானோர் பொருட் பெறுவனவுக் குறிப்புப் (GRN) பற்றி தெரிந்திருக்கவில்லை.

(2) உரிய அறிவை கொண்டிருக்காமையினால் பலர் இந்தப் பகுதிக்கு விடையளிக்கவில்லை.

**வினா இல. 05** – 10 புள்ளிகள்
**(விருப்பத் தேர்வு வினா)**

இந்த வினாவின் பகுதி A யில் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு பற்றிய அறிவும் பகுதி B யில் செலவுகளை நேர் மற்றும் நேரில் செலவுகளாக வகைப்படுத்தல் பற்றிய அறிவும் பரீட்சிக்கப்பட்டது.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் கிழ்வருமாறு:

**பகுதி A**

(1) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் கடன்பட்டோர் மீதிகளின் மொத்தத் தொகையை காட்டவதற்குப் பதிலாக சிலர் தனித்தனி மீதிகளை காட்டியிருந்தனர்.

(2) வழங்கப்பட்ட கழிவை கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவுப் பதிவு செய்வதற்குப் பதிலாக சிலர் வரவுப் பதிவு செய்திருந்தனர்.

(3) சிலர் வரவுப் பதிவுக்குப் பதிலாக செலவுப் பதிவையும், செலவுப் பதிவுக்குப் பதிலாக வரவுப் பதிவையும் செய்திருந்தனர்.

(4) சிலர் பேரேட்டுக் கணக்குகளை தயாரித்திருந்தபோதிலும் சமமாகாத காரணத்தினால் இறுதி மீதிகளை எடுக்கவில்லை.

**பகுதி (B)**

(1) பலர் எந்திர இயக்குனரின் சம்பளத்தை (ரூபா 850,000/-) நேர்க்கிரயமாக குறிப்பிட்டிருந்தனர்.

(2) நேர்க்கிரயமான பொத்தான்களின் கொள்வனவை நேரில் கிரயமாக காட்டியிருந்தனர்.

**வினா இல. 06** – 10 புள்ளிகள்
**(விருப்பத் தேர்வு வினா)**

இந்த வினாவின் பகுதி A யில் தொக்குப் பேரேட்டில் FIFO முறையின் பிரயோகமும், பகுதி B யில் ஊழிய ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டத்தின் அனுகூலங்களும் பரீட்சிக்கப்படன.

**பகுதி A**

(1) பலர் தொக்குப் பேரேட்டின் வடிவமைப்பு மற்றும் அதன் தயாரிப்பை தெரிந்திருக்கவில்லை.

(2) சிலர் FIFO பற்றிய அறிவின்மை காரணமாக தொக்கின் மதிப்பை சரியாகக் கணித்திருக்கவில்லை.

**பகுதி B**

சிலர் ஊழிய ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டம் பற்றி எழுதியிருந்த போதிலும் அனேகமானோர் அதன் மூன்று அனுகூலங்களை எழுதியிருக்கவில்லை.

- * * * -